# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

# திருச்செங்கோடு

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.275/2025

CNR.No. TNNM08-001490-2025

2026– ம் ஆண்டு ஜூலை திங்கள் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திருச்செங்கோடு ஊரக காவல் நிலையம்<br>குற்ற எண்.77/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் முகவரி | செந்தில் (54),<br>த/பெ.குப்புசாமி,<br>பட்டக்காடு,சக்திநாய்க்கன்பாளையம், குமரமங்கலம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | சட்டப் பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 16.03.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 16.03.2025 (Bailed by police) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 18.08.2025 |
| பிரிவு 263 BNSS - ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | 29.05.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 23.06.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 13.07.2026 |

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:34:28 +0530

| | |
|---|---|
| பிரிவு 351(1)(ஆ) BNSS இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 15.07.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | Nil |
| முடிவு | இவ்வழக்கின் எதிரி சட்டப் பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) -BNSS-ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கானது 29.08.2025 - ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் அ. உதயபானு, B.com.,B.L., நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கனகமணி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

01) கடந்த 16.03.2023 - ம் தேதி 17.00 மணிக்கு திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட சக்திநாய்க்கன்பாளையம், பட்டக்காடு அருகில் எதிரி செந்தில் என்பவர், சட்டத்திற்கு புறம்பாக பனங்கள்ளை சுயலாபத்திற்காக விற்பனைக்காக வைத்திருந்ததாகவும், தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்க சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன்

கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு பிரிவு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டுகள்:-</u>

03) இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்தும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகாந்திரங்கள் இருப்பதாக தெரிய வந்ததால், இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024 – ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அதனை எதிரிக்கு படித்துக்காட்டி விளக்கிக் கூறி வினவியபோது பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் பதில் கூறினார். எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பை மெய்ப்பிக்க வேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

04) இவ்வழக்கில் புகார்தாரரான திருச்செங்கோடு ஊரக காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3/திரு.நந்தகுமார் அவர்கள் தலைமைக்காவலர்கள் திரு.சபரீசன் மற்றும் திரு.ஆனந்தன் ஆகிய போலீஸ் பார்ட்டியுடன் கடந்த 16.03.2025–ம் தேதி 16.00 மணியளவில் திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகத்தில் மது விலக்கு ரோந்து அலுவல் சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டு சக்திநாய்க்கன்பாளையம் அருகே உள்ள பனஞ்சாரியில் கண்காணித்துக்கொண்டு சென்றபோது எதிரியானவர் ஒரு சிறிய பிளாஷ்டிக் குடத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு அல்லக்கயிறுடன்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:34:44 +0530

பனமரத்திலிருந்து இறங்கியவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் அரசு அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பான பனமரத்திலிருந்து பனங்கள்ளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி சோதனை செய்தபோது பிளாஷ்டிக் குடத்தில் 2 லிட்டர் பனங்கள் இருந்ததாகவும், தனிநபர் சாட்சியம் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் தலைமைக்காவலர்கள் திரு.சபரீசன் மற்றும் திரு.ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர்/**அ.சா.ஆ.1 –ல்** கைப்பற்றி, வழக்குச்சொத்தை உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படி அதே இடத்தில் கொட்டி அழித்து அழித்தல் மகஜர்/**அ.சா.ஆ.2** தயார்செய்து எதிரியை காரணம் கூறி காவல் நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.77/2025 ச.பி. 4(1)(C) TNP Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை/ **அ.சா.ஆ.3** பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை தக்க நிலைய பிணையில் விடுவித்ததாகவும், காவலர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது ச.பி. 4(1)(C) TNP Amendement Act-ன் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

05) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்று பொருட்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

06) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியை பிரிவு 351(1)(ஆ)BNSS–ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:34:49 +0530

07) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

08) எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கு எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக போடப்பட்டது என்றும், எதிரியிடமிருந்து எந்த பானங்களையும் போலிசார் கைப்பற்றவில்லை என்றும், இந்த வழக்கில் பனங்கள் வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படும் பிளாஷ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றும், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளாக சம்பவ இடத்தில் வசிக்கும் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், போலிசார்களையே சாட்சிகளாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும், எதிரியை விடுதலை செய்யுமாறும் வாதிட்டார்.

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:-**</u>

09) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு**</u>

10) எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024-ன் கீழான குற்றத்தை நிரூபிக்க வேண்டுமென்றால், எதிரி சட்டவிரோதமான வகையில் அரசின் அனுமதியின்றி அதிகலாபமடைய வேண்டி பனங்கள்ளை விற்பனைக்காக பதுக்கி

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:34:56 +0530

வைத்திருக்கவோ அல்லது கடத்தி சென்றிருக்கவோ வேண்டும். எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை குறித்து பரிசீலித்ததில்,

11) இவ்வழக்கில் அ.சா.3/காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரராக இருந்து தானே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை அதிகாரியாகவும் இருந்து இறுதியறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். மேலும், இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளாக பொதுமக்கள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்பதும், இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக எந்த ஒரு பனங்கள்ளையோ, அது வைத்திருந்த பிளாஷ்டிக் குடத்தையோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதும், இருதரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளாக உள்ளது.

12) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலித்ததில் அ.சா.1 தலைமைக்காவலர் திரு.சபரீசன் மற்றும் அ.சா.2 தலைமைக்காவலர் திரு.ஆனந்தன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 16.03.2025 - ம் தேதி 16.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.நந்தகுமார் அவர்களுடன் தாங்கள் இருவரும் திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட சக்திநாய்க்கன்பாளையம் அருகே உள்ள பனஞ்சாரியில் கண்காணித்துகொண்டிருந்தபோது ஒரு நபர் ஒரு சிறிய பிளாஷ்டிக் குடத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு அல்லக்கயிறுடன் பனமரத்திலிருந்து இறங்கியவரை சுற்றி வளைத்து பிடித்து காவல் உதவி ஆய்வாளர் அவரை விசாரிக்க அவர் தன் பெயர் செந்தில் என்றும் அரசு அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பான பனமரத்திலிருந்து பனங்கள்ளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி சோதனை செய்தபோது பிளாஷ்டிக்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.17 17:35:03 +0530

குடத்தில் 2 லிட்டர் பனங்கள் இருந்ததாகவும், அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதில் தாங்கள் இருவரும் சாட்சியாக கையெழுத்து செய்ததாகவும், மேற்படி வழக்கு சொத்தை காவல் உதவி ஆய்வாளர் அதே இடத்தில் கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தார் என்றும், பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 77/2025 ச/பி. 4(1)(C) TNP Amendement ACt-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளனர்.

13) அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது குறுக்குவிசாரணையில், தாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரி கள்ளை இறக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தார் என்றும், பிளாஷ்டிக் குடத்தை சம்பவ இடத்திலேயே உடைத்து அழித்துவிட்டதாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பனங்கள்ளை மாதிரி எடுத்து அதை ஆய்விற்கு அனுப்பி அது பனங்கள்ளா அல்லது பதனீரா என ஆய்வு செய்ய அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். அ.சா.1 மற்றும் அ.சா.2–ம் தங்களது முதல் விசாரணையில் எதிரி கள்ளை மரத்திலிருந்து இறக்கியபோது சுற்றிவளைத்து பிடித்ததாக சாட்சியமளித்துவிட்டு குறுக்குவிசாரணையில் எதிரி கள்ளை இறக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்ததாக தெரிவித்து சாட்சியமளித்துள்ளனர். இது முரண்பாடாக உள்ளது.

14) மேலும் அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 16.03.2025 - ம் தேதி 16.00 மணியளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகம் சக்திநாய்க்கன்பாளையம் அருகே உள்ள பனஞ்சாரியில்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.17 17:35:09 +0530

கண்காணித்துகொண்டிருந்தபோது ஒரு நபர் ஒரு சிறிய பிளாஷ்டிக் குடத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு அல்லக்கயிறுடன் பனமரத்திலிருந்து இறங்கியவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது, அவர் அரசு அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பான பனமரத்திலிருந்து பனங்கள்ளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி சோதனை செய்தபோது பிளாஷ்டிக் குடத்தில் 2 லிட்டர் பனங்கள் இருந்ததாகவும், அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.77/2025 ச/பி. 4(1)(C) TNP Amendement ACt-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்து, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் தாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரி கள்ளை இறக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தார் என்றும், பிளாஷ்டிக் குடத்தை சம்பவ இடத்திலேயே உடைத்து அழித்துவிட்டதாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பனங்கள்ளை மாதிரி எடுத்து அதை ஆய்விற்கு அனுப்பி அது பனங்கள்ளா அல்லது பதனீரா என ஆய்வு செய்ய அனுப்பிவைக்கப்படவில்லை என்றும், மேலும் இந்த வழக்கில் சம்பவ இடம் குறித்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்யப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து தனிநபர் சாட்சிகள் முன்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவுசெய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே அ.சா.3 தனது

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.17 17:35:14 +0530

முதல் விசாரணையில் எதிரி மரத்திலிருந்து இறங்கியபோது பிடித்ததாக கூறிவிட்டு, குறுக்குவிசாரணையில் எதிரி கள்ளை இறக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தார் அப்போது பிடித்தோம் என்று சாட்சியமளித்துள்ளது முரண்படாகவே காணப்படுகிறது.

16) எனவே உண்மையில் அரசுதரப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல் அ.சா.3, அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் சம்பவ இடத்திற்கு சென்று எதிரி பனைமரத்திலிருந்து கள்ளை இறக்கிக்கொண்டு இறங்கியபோது பிடித்தார்களா என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் எதிரி பிளாஷ்டிக் குடத்தில் 2 லிட்டர் பனங்கள் கொண்டுவந்ததாகவும், அதை சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டதாகவும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்படி பிளாஷ்டிக் குடத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் பிளாஷ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஆஜர்செய்திருக்கமுடியும். ஆனால் பிளாஷ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் பிளாஷ்டிக் குடத்தை சம்பவ இடத்திலேயே உடைத்து அழித்துவிட்டதாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால் இவ்வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள அழித்தல் மகஜரில் பிளாஷ்டிக் குடத்தை உடைத்து அழித்ததாக எந்த குறிப்பும் காணப்படவில்லை. எனவே உண்மையில் எதிரியிடமிருந்து பிளாஷ்டிக் குடத்துடன் 2 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பனங்கள்ளை மாதிரி எடுத்து அதை ஆய்விற்கு அனுப்பி அது பனங்கள்ளா அல்லது பதனீரா என ஆய்வு செய்ய அனுப்பிவைக்கப்படவில்லை என அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:35:20 +0530

17) மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் தங்களது சாட்சியத்தில் 16.03.2025-ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக சாட்சியமளித்துள்ளனர். ஆனால் இவ்வழக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை 16.03.2025–ம் தேதி பதிவுசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் 2–வது பக்கத்தில் 16.03.2023-ம் தேதி வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜரிலும் 16.03.2023–ம் தேதி வழக்குச்சொத்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உண்மையில் சம்பவ இடத்திற்கு சம்பவ நாளில் அ.சா.1 முதல் அ.சா3 வரையானவர்கள் 16.03.2023–ம் தேதி ரோந்து பணிக்கு சென்றார்களா, அல்லது 16.03.2025–ம் தேதி ரோந்து பணிக்கு சென்றார்களா, எதிரியிடமிருந்து சம்பவ இடத்திலிருந்து பனங்கள் கைப்பற்றினார்களா என்ற சந்தேகம் எழுகிறது. உண்மையில் பனங்கள் கைப்பற்றியிருப்பின் அதை மாதிரி எடுத்து ஆய்விற்கு அனுப்பாதது ஏன் என்ற சந்தேகம் எழுகிறது. எனவே அரசுதரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்ற சந்தேகம் எழுகிறது.

18) மேலும், இவ்வழக்கு எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியே புகார்தாரராக இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை அதிகாரியாகவும் இருந்து இறுதியறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். இது சட்ட முரணாக உள்ளதாகவும், உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் தனிநபர் சாட்சியங்களை விசாரித்திருக்க வாய்ப்புள்ளது எனவும், இது பொய்யான வழக்கு என்பதால் தான் தனிநபர் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என எதிரிதரப்பில் வாதிடப்பட்டது. அது ஏற்புடையதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:35:29 +0530

19) எனவே, மேற்படி ஆய்வுகளின்படி எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21) இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றவில்லை, எனவே, அதுகுறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

22) எதிரி இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 17–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரபட்டது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.17 17:35:35 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

<u>அரசு தரப்பு சாட்சிகள்.–</u>

| Prosecution Witness No | Name of Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 /LW1 | திரு. சபரீசன் | தலைமைக்காவலர் |
| அ.சா.2 /LW2 | திரு.ஆனந்தன் | தலைமைக்காவலர் |
| அ.சா.3/LW3 | திரு.நந்தகுமார், | காவல் உதவி ஆய்வாளர் |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்.–</u>

| Exhibit No | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 – 23.06.2026 |
| அ.சா.ஆ.2 | அழித்தல் மகஜர் | அ.சா.1 – 23.06.2026 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 – 13.07.2026 |

அரசு தரப்பு சான்று பொருள்.– இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சி, சான்றாவணம்.– இல்லை.

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.17 17:35:41 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

குறிப்பு.–

1. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையிலிருந்தார்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE**

CASE SUMMARY- CC.No.275/2025

<table>
<tr><th>S.No.</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1.</td><td>Period of Remand of the Accused</td><td>Bailed by police (16.03.2025)</td></tr>
<tr><td>2.</td><td>The Date of Filing of the Complaint/Final Report of the Court</td><td>Complaint 16.03.2025<br>Final Report on 18.08.2025</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Committal of the Case to the Court of Session</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td>The Date of Questioning of the Accused under sections 228, 240, 246, 251 of Code of Criminal Procedure 1973/228, 263 BNSS, as the case maybe</td><td>29.05.2026</td></tr>
<tr><td>5.</td><td>Filing of Miscellaneous Petitions an their results on challenge before superior Court. Except routine petitions like petitions Under Section 355 of the BNSS</td><td>Nil</td></tr>
<tr><td>6.</td><td>Date of examination in-chief and cross-examination of a Witness</td><td><table><tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW.1</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr><tr><td>PW.2</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr><tr><td>PW.3</td><td>13.07.2026</td><td>13.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the Accused under section 351(1)(b) of the BNSS</td><td>15.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case maybe</td><td>Nil</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.17 17:35:46 +0530

Judicial Magistrate,
Tiruchengode.